மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: மத்திய அரசிடத்திலிருந்து வந்த கடிதத்திற்கு பதில் எழுதியிருக்கிறோம். அது எவ்வளவு விரைவில் வருகிறதோ அவ்வளவு விரைவில் மாநில அரசும், மத்திய அரசும் சேர்ந்து அந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரும்.

Watar supply from Kadampakkulam.

• 808 Q.—THIRU G. R. EDMUND: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether any representation, for the formation of a separate supply channel for the 12 tanks under the Kadampakkulam tank in Tiruchendur taluk, has been received by the Government from the agriculturists of that area?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அண்மையில் இல்லை.

திரு. க. உரொ. எட்மண்ட்: அண்மையில் வரவில்லை என்ற பதிலிலிருந்து நீண்ட நாட்களுக்கு முன்னால் தொகுதி மக்களிடமிருந்து அப்படிப்பட்ட கோரிக்கை வந்திருக்கிறது என்பதை மறைமுகமாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் அமைச்சர் அவர்கள். நீண்ட காலமாக இந்தத் திட்டம் வற்புறுத்தி வரப்படுகிற காரணத்தினாலும் அது இந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு மிகப் பலன் உள்ள திட்டமாக இருப்பதின் காரணத்தினாலும், இந்தத் திட்டத்தை கூடிய விரைவில் நிறைவேற்றினால் உணவு உற்பத்தியை நாம் அதிகப்படுத்தி மிக முன்னேறிச் செல்லலாம் என்ற காரணத்தினாலும், அரசு இந்தத் திட்டத்தை கூடிய விரைவிலே நிறைவேற்றுவதற்கு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கடம்பாக்குளத்திற்கு கீழே உள்ள அயக்கட்டுதார்களுக்கு முன் உரிமை இருக்கிறது. குளப்பாசிதார்களுக்கு பின் உரிமை தான். முன் உரிமை பெற்ற கடம்பாக்குள ஆயக்கட்டுதார்கள் பாசன வசதியில் எந்த வகையிலும் பாதகம் வராத வகையில் ஏற்பாடு செய்து—கடம்பாக்குளத்து ஆயக்கட்டுதார்கள் தங்கள் ஆட்சேபனையை தெரிவித்திருக்கிறார்கள் என்று அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது—பல ஆண்டுகளாக இது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மை தான்—கீழே உள்ள பாசனதார்களுக்கு பாதகம் ஏற்படாமல் பூமி மட்டத்தைக் குறைக்காமல் 4 மடைகளைப் புதிதாக அமைக்கலாம் என்று தலைமைப் பொறியாளர் ஆலோசனை தெரிவித்திருக்கிறார்கள்.

1974 ஏப்ரல் 10]

அதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அதை நடத்தவேண்டும் என்று ஆணை பிறப்பித்திருக்கிறது. அதற்கு ரூ. 3.685 லட்சம் அளவில் தொழில் நுட்ப ஒப்புதலுக்கு தலைமைப் பொறியாளருக்குச் சென்று, அவரும் ஒப்புதல் அளித்துவிட்டார்கள். இந்தத் திட்ட வேலை கூடிய சீக்கிரம் ஆரம்பிக்கும்.

திரு. க. உரொ. எட்மண்ட்: கடம்பாக்குளத்து நேரடி விவசாயிகள், ஆயக்கட்டுதார்கள் எதிர்க்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கே உள்ள ஆட்சேபனையை ஒழுங்கான முறையில் சமாதானப்படுத்தி, அதற்கு ஒப்புதல் தருவதற்கு ஏற்பாடு செய்தால் இந்தத் திட்டத்தை மறுபரிசிலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அவர்களுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் கீழே இருக்கிற குளத்துக்கு நீர்ப்பாசனம் செய்வதற்குத் தான் புதிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் புதிய திட்டத்தின் கீழ் சிக்கிரம் வேலை துவங்கும்.

Water supply from Manimuthar System.

*809. *Q.*—THIRU T. GANAPATHY: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to cut direct channels to each ayacut tank under the Manimuthar System; and

(*b*) if so, what is the stage and when it will be sanctioned and work commenced?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. டி. கணபதி: நாங்குனேரி வட்டத்தில் மணிமுத்தாறு பாசனத்தின் கீழ் பல குளங்கள் இருக்கின்றன. அந்தக் குளங்களுக்கு ஒன்று விட்டு ஒன்று தண்ணீர் விட்டால் மூன்று குளங்கள் இருந்தால் முதல் குளத்துக்கு மாத்திரம் தான் தண்ணீர் விடப்படுகிறது. எல்லாக் குளங்களுக்கும் தண்ணீர் கொடுக்க மாவட்ட அளவில் சொல்லி, அங்குள்ள என்ஜீனியர்கள் ஒரு தனிக்கால் திட்டத்தை வகுத்து, அதற்கான மதிப்பீட்டையும் அனுப்பி